Arima Nokku

# அரிமா நோக்கு

8 : 2 சூலை 2014

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
8:2 சூலை 2014

வெள்ளை யானை
- வ. ஜெயதேவன் 03
தமிழ் உரைமரபு
- இரா. வேங்கடேசன் 06
தொல்காப்பியமும் பாட்டியலும்
- கி. காவேரி 13
இலக்கியமும் கவின்கலைகளும்
- ப. மருதநாயகம் 18
இறவாக்காலப்பொதுவினைமுற்று
- இரா. கோதண்டராமன் 24
சுலாமித் ஃபயர்ஸ்டோன்
- இரா. பிரேமா 30
தொல்காப்பிய ஆட்சி
- இரா. மோகன் 33
Yāḻ—Veena
- K. Narmada 37
சங்க இலக்கியத்தில் வரி பெறும் இடம்
-கா. ஜெயந்தி & வ. தனலட்சுமி 41
வானம்பாடி இயக்கத்திற்குப்பின் தமிழ்ப் புதுக்கவிதை வளர்ச்சி
- ப. சு. மூவேந்தன் 44
பாரதி மொழிபெயர்த்த ஈசுவாஸ்ய உபநிடதம்
- எஸ். சுந்தரராமன் 49
பாலகுமாரன் புதினங்கள்: சமூகப் பிரச்சனைகளும் தீர்வுகளும்
- எஸ். முருகேசன் 51
தொல்காப்பியத்திற்கான உரைமொழி பாடவேறுபாட்டுப் பதிப்பு
- இரா. அறவேந்தன் 55
நூல் அறிமுகம்
இறக்குமதி
ஆய்வாளர் அறிமுகம்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## அன்னைமொழித் திங்கள்

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நடுவண் அரசு புரியத்தக்க எத்தனையோ இன்றியமையாச் செயல்பாடுகள் காத்திருக்க, இந்தியாவின் அடையாளமே சமற்கிருதம்தான் என்கிற மனப்பான்மையில் நடுவண் அரசுப் பாடத் திட்டப் பள்ளிகளில் எல்லாம் 2014-ஆகத்து 7 முதல் 13 வரை சமற்கிருத வாரம் கடைப்பிடிக்க வேண்டும் என ஆணை பிறப்பித் துள்ளது.

இந்தியா ஒருமொழிபேசும்,ஒருமதம் பின்பற்றும்,ஒரு பண்பாட்டு நடை முறைகள் கடைப்பிடிக்கும் நாடு இல்லை. மொழிகளின் கலம்பகமாய், கலை, பண்பாட்டு ஒழுக்கங்களின் கதம்பமாய் இருக்கும் நாடு. ஓரம் சாரா நெஞ்சுடன் மக்களாட்சிய மாண்புகளை நெகிழவிடாமல் இந்திய அரசு அனைத்தையும் அரவணைத்து வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் 387 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. எந்த மாநில மொழியாகவும் இல்லாத, எந்த மாநில மக்கள் பேச்சுமொழியாகவும் இல்லாத சமற்கிருதத்தை எந்தத் தகுதி கருதி - இந்தக் கொண்டாட் டத்திற்கு இந்திய அரசு தேர்ந்தெடுத்தது? 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை அறிக்கை 14135 பேர்மட்டும்தான் இப்பரந்துபட்ட நாட்டில் சமற்கிருதம் பேசுவதாகப் பேசுகிறது.

இப்படிப்பட்ட, மக்கள்மாக்கடலில் ஒரு குட்டித் தீவு அளவுகூட இல்லாத ஒரு மொழியை ஒரு நாடே கொண்டாடவேண்டும் என்பது எப்படி ஏற்கத் தக்கது? குறிப்பிட்ட ஒரு மதத்தின், குறிப்பிட்ட ஒரு இனத்தின் குறியீடாகக் கருதி அதனையே அனைவருக்கும் ஆக்கி மற்றமற்ற மொழிகளைப் புறந்தள்ள எத்தனிக்கும் மறைமுகத்திட்டத்தின் கால்கோள் விழாவை நடுவண் அரசு நடத்தும் முயற்சிதானா இது?

இந்திய அரசியல் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 22 மொழிகள் குறித்த எவ்விதக் கண்ணோட்டமும் இல்லாமலும், நடுவண் அரசு சார்ந்த தன்னாட்சி நிறுவனமான சாகித்திய அகாதமி தகுதிகண்டு வளர்க்க ஏற்றுக்கொண்டுள்ள 24 மொழிகள்பற்றிய எவ்வித அக்கறை யில்லாமலும் சமற்கிருதத்தைத் தனிச்சிறப்புக் கொடுத்துப் பாராட்டுவ தும் வாரம் கொண்டாடுவதும் ஆதிக்கப்போக்கின் அடையாளம் தவிர வேறு என்ன?

இந்திய அரசு - செம்மொழி என்று ஆவணப்படுத்தி ஏற்றுக்கொண் டுள்ள முதல் மொழியான தமிழ்மொழியை மனம்கொண்டு தமிழ்மொழி வாரத்தை இந்தியா முழுதும் கொண்டாட ஆணை பிறப்பிக்குமா? இல்லை, பொதுவில் ஒவ்வொரு மாநிலமும் தன் தாய்மொழியைப் போற்றவும் வளர்க்கவும் விருப்பம்கொண்டு செயலாற்ற ஊக்கப்

ISSN 2320-4842

படுத்தும்வண்ணம் இந்தியப் பெரு நாட்டு விடுதலைத் திங்கள் ஆகத்தை *தாய்மொழித் திங்கள்* என்று அடையாளப்படுத்தி அறிவிக்க முன்வருமா?

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

எஸ். ஏ. சங்கரநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of *'Nokku'* payable at Chennai**

**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**

**S.B. A/c No. 16810100006423**

## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448